මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: BD/CBP/01/01/05/2022
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2023.01.27

**தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இல.: 01/2023**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் / மாவட்டச் செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச உடமை கம்பனிகளின் தலைவர்கள்

**2023 ஆண்டிற்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட மீண்டெழும்செலவின ஏற்பாடுகளை 6 சதவீதத்தினால் குறைத்தலும் அரச செலவினங்களை முகாமைசெய்தலும்**

2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த அரசாங்க வருமானத்தைச் சேகரிப்பதில் உள்ள சிரமங்களிலிருந்து எழும் பாதகமான தாக்கங்களைத் தணிக்கும் நோக்கத்துடன், அரசாங்க செலவினங்களை மிகவும் சிக்கனமான முறையில் மேற்கொள்ளவும், அத்தியாவசியமற்ற செலவினங்களை முடிந்தவரை குறைக்கவும் 2023 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட தொடர்ச்சியான ஒதுக்கீடுகளில் குறைந்தபட்சம் 6 சதவீதத்தைக் குறைக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அதன்படி, அனைத்து செலவினத் தலைப்புகளினதும் பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் பின்வரும் நடவடிக்கைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

**02. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள்**

(அ) பின்வரும் நோக்கக் குறியீடுகளுக்கு (Object Codes) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளைத் தவிர்த்து, 2023 வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளில் மொத்த மீண்டெழும் செலவினத்தில் குறைந்தது 6 சதவீதத்தை குறைப்பதற்கு அனைத்து பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | நோக்கம் | நோக்கக் குறியீடு |
|---|---|---|
| (i) | சம்பளங்கள் மற்றும் வேதனாதிகள் | 1001 |
| (ii) | மருத்துவ வழங்கல்கள் | 1204 |
| (iii) | வாடகைகள் மற்றும் உள்ளூராட்சி வரிகள் | 1404 |
| (iv) | இளைப்பாறல் நன்மைகள் | 1502 |
| (v) | உள்நாட்டுக் கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவு | 1601 |
| (vi) | வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவு | 1602 |
| (vii) | திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மீதான கழிவுகள் | 1603 |
| (vii) | கட்டாய நலன்புரி நன்மைக் கொடுப்பனவுகள் (2(இ)vi)1 மற்றும் நியதிச்சட்ட மற்றும் ஒப்பந்த கொடுப்பனவுகள் | - |

(ஆ)செலவினங்களைக் குறைப்பதற்காக இனம் காணப்பட்ட செயன்முறைகளை உள்ளடக்கிய திருத்தப்பட்ட செலவின மதிப்பீடுகள், இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்திற்கு அமைவாக, தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தில் விடயத்திற்குப் பொறுப்பான சம்பந்தப்பட்ட பதவிநிலை அலுவலருக்கு 2023.02.28 அன்று அல்லது அதற்கு முன்னராக மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(இ) செலவினங்களைக் குறைப்பதற்காக விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை கண்டிப்பாக கடைபிடிப்பதுடன், ஒவ்வொரு நிறுவனத்தின் தன்மையின் அடிப்படையில் மூலோபாய நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அவசியம். பொதுவாக, அனைத்து நிறுவனங்களும் பின்வரும் செயன் முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

i. கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி வணிகச் செயன்முறை மறுசீரமைப்பு, உகந்த பொருள் முகாமைத்துவம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் நிகழ்நிலை (On-line) மூலம் சேவை வழங்கல் போன்ற நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், நிறுவன மீண்டெழும் தொழிற்பாட்டுச் செலவினங்களை முடிந்தவரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ii. மின்சாரம், நீர், தொலைத்தொடர்பாடல், எரிபொருள் மற்றும் ஏனைய ஒப்பந்தச் சேவைகள் மீதான செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் அத்தகைய சேவைகளைப் பயன்படுத்துவதற்கான கணக்காய்வுகளை மேற்கொள்ளவும் பொருத்தமான நடவடிக்கைகளைப் பிரயோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும், அலுவலகத்திற்கு தேவையான பொருட்கள் கொள்வனவை கண்டிப்பாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

iii. நோக்கக் குறியீட்டு இல. 1002 - மேலதிக நேரம், விடுமுறைக் கொடுப்பனவு மற்றும் நோக்கக் குறியீடு இல. 1003 - பிற கொடுப்பனவுகள் என்ற ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் குறைந்தபட்சம் 6 சதவீதத்தை குறைக்க வேண்டும் என்பதால், மேலதிக நேர கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய செலவினங்களை கண்டிப்பாக கட்டுப்படுத்துவது அவசியமாகும். எனவே, அத்தகைய கொடுப்பனவுகளை அங்கீகரிக்கும் அதிகாரிகள், மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கடமைகளுக்கு உண்மையான சேவைத் தேவை இருப்பதையும், அதற்கான பணம் செலுத்துவதற்குத் தேவையான சேவைக் காலத்திற்குள் பணியாளர் உண்மையில் சேவையில் ஈடுபட்டிருப்பதையும் உறுதி செய்தல் வேண்டும். மேலும், உரிய அதிகாரம் இல்லாமல், அமைச்சு அல்லது நிறுவன மட்டத்தில் வழங்கப்பட்ட உள்ளக அறிவுறுத்தல்களின் கீழ் வழங்கப்படும் கொடுப்பனவுகள் நிறுத்தப்படுதல் வேண்டும்.

iv. தொழிற்பாட்டு குத்தகையின் கீழ் கொள்வனவுசெய்யப்பட்ட வாகனங்களுக்கான நோக்கக் குறியீடுகள் இல. 1202 - எரிபொருள், 1401 - போக்குவரத்து, 1408 - குத்தகை வாடகை மீதான செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு குழுமத்தில் போதுமான வாகனங்கள் இருக்கும் போது, உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துடைய அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வாகனங்களை வாடகை அடிப்படையில் கொள்வனவு செய்யக்கூடாது. உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்துடைய அலுவலர்களால் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வரையறைக்குள் உத்தியோகபூர்வ வாகனம் மட்டுமே பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வது பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்களது பொறுப்பாகும். உத்தியோகபூர்வ வாகனத்திற்குப் பதிலாக உத்தியோகபூர்வ வாகனங்கள் / மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவுகளைப் பெறும் அலுவலர்ளுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குழும வாகனங்கள் வழங்கப்படமாட்டாது என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

v. கூட்டங்கள்/மாநாடுகள்/கலந்துரையாடல்களை நடத்துவதற்கு முடிந்தவரை நிகழ்நிலை முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம், நன்கு திட்டமிடப்பட்ட முறையில், மிகவும் தேவையான நடவடிக்கைகளுக்கு மட்டுமே குழும வாகனங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும், வலய/பிராந்திய / உப அலுவலகங்கள் மூலம் எளிதில் ஈடுசெய்யக்கூடிய உத்தியோகபூர்வ / சேவைத் தேவைகள் தொடர்பாக நிரல் அமைச்சுகள் / திணைக்களங்கள் மூலம் போக்குவரத்துச் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

vi. இந்த சுற்றறிக்கையின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளைக் குறைத்தல் பின்வருவனவற்றுக்குப் பொருந்தாது;
- பாதகமான பொருளாதார சூழ்நிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்.
- சமுர்த்தி பயனாளிகள், சிரேட்ட பிரசைகள், சிறுநீரக நோயாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள்.
- கர்ப்பிணி தாய்மார்களுக்கு போஷாக்குணவுப் பொதி, பாடசாலை சிறுவர்களுக்கு காலை உணவு மற்றும் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிறையுணவு வழங்குதல்.
- திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் உட்பட பாடசாலை மாணவர்களுக்கான நலன்புரி நிகழச்சித்திட்டங்கள்.

எவ்வாறாயினும், மேலே உள்ள 2இ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும், பயனாளிகளின் "இலக்கு செயற்திறனை" மேம்படுத்துவதன் மூலமும், நோக்கக் குறியீட்டு இல. 1501 இன் கீழ் நலத்திட்டங்களின் ஏற்பாடுகளைச் சேமிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

vii. நோக்கக் குறியீட்டு இல. 1204 - மருந்துப் பொருட்கள் செலவு சேமிப்பு கணக்கீடுகளில் இருந்து விலக்களிக்கப்பட்டாலும், விவேகமான பொருட்கள் முகாமைத்துவம், மருந்துகளை முறையாக சேமித்தல், ஒருங்கிணைந்த மருத்துவ வழங்கல் தகவல் அமைப்பின் உகந்த பயன்பாடு மற்றும் கொள்முதல் தாமதங்களைக் குறைத்தல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

viii. 03/2022 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையின் மூலம் முற்பணக் கணக்குகளின் கீழ் பதவி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தற்போதைய வரையறைகள் எவ்வித மாற்றமுமின்றி மேலும் அமுலில் இருக்கும்.

**3. மாகாண சபைகள்**

நோக்கக் குறியீட்டு இல. 1507- மாகாண சபைகளுக்கான மானியங்கள் என்பதன் கீழ் நிதி ஏற்பாடுகளைக் குறைப்பதற்கான வழிகாட்டுதல்கள் நிதி ஆணைக்குழுவால் வழங்கப்படும்.

## 4. அரச வரவுசெலவு திட்டத்தின் மூலம் நிதியளிக்கப்படுகின்ற நியதிச்சட்டமுறைச் சபைகள் மற்றும் அரச தொழில் முயற்சிகள்

(அ) நோக்கக் குறியீடு இல. 1503 இன் கீழ் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து சம்பளம் மற்றும் ஊதியத்தை கழித்தன் பின்னர் மீதமுள்ள நிதி ஏற்பாட்டிலிருந்தும் நோக்கக் குறியீடு இல. 1509 இன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளிலிருந்தும் குறைந்தபட்சம் 6 சதவீதத்தை சேமிக்க இந்த நியதிச் சட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இப்பின்னணியில், மேலுள்ள 2(அ) முதல் (இ) வரையிலான ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும். இதற்கமைவாக, திருத்தப்பட்ட செலவின மதிப்பீடுகள் பணிப்பாளர் சபையின் ஒப்புதலுடன் 2023.02.28 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். (பின்னிணைப்பு I பொருத்தமான வகையில் திருத்தப்பட்டு, இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படலாம்)

(ஆ) சேகரிக்கும் வருமானத்தை வைத்துக் கொள்வதற்கு சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களைத் தவிர, இந்த சட்டப்பூர்வ நிறுவனங்களால் அரசாங்கத்தின் சார்பாக அறவிடப்பட்ட கட்டணம் அல்லது சேகரிக்கப்பட்ட வருமானத்தை உடனடியாக திரட்டு நிதியத்துக்கு மாற்றுதல் வேண்டும். வருடாந்த மதிப்பிடப்பட்ட வரையறைகளுக்குட்பட்டு, தேவைக்கேற்ப இந்த நிறுவனங்களினால் விடுக்கப்படும் கோரிக்கைக்கான கட்டு நிதி திறைசேரியினால் வழங்கப்படும். மேலும், திறைசேரியினால் இந்த நிறுவனங்களுக்கு வழங்கப்படும் நிதியினை வைப்புக்களாகவோ முதலீடுகளாகவோ வைத்திருத்தல் கூடாது.

## 5. அரசாங்க வரவுசெலவு திட்டம் மூலம் நிதியளிக்கப்படாத நியதிச்சட்ட நிறுவனங்கள்

2023.01.16 ஆந் திகதிய 23/0100/604/007 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின்படி செலவினங்களைக் குறைக்கும் வகையில் அரச வங்கிகள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரசாங்க கம்பனிகள் மற்றும் ஏனைய அரச உடமை தொழில்முயற்சிகள்

என்பவற்றின் மீண்டெழும் செலவினங்களில் 6 சதவீதத்தை முடக்குவதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் மேற்படி நிறுவனங்களுக்கு தனித்தனியாக வெளியிடும்.

**6. பொதுவான அறிவுறுத்தல்கள்**

(அ) கொடைவழங்கும் நிறுவனங்களினால் செலவினம் முழுமையாக ஈடுசெய்யப்படாத நிலையில், அரசாங்க அலுவலர்கள் வெளிநாட்டுக் கற்கைகள் / பயிற்சி நிகழ்ச்திட்டங்கள் / கலந்துரையாடல்கள்/ மாநாடுகள்/ சுற்றுலாக்கள் ஆகியவற்றில் பங்கேற்க அனுமதிக்கக் கூடாது.

(ஆ) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அல்லது வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மூலம் கிடைக்கப்பெறுகின்ற அல்லது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் உரிய அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் / சமவாயங்களின் கீழ் அரசாங்க அலுவலர்களுக்கு உரித்தான அல்லது இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்கள் / சமவாயங்களின் கீழ் குறித்த நிறுவனமொன்றின் அலுவலருக்கு உரித்தான முழு செலவினமும் குறித்த கொடைவழங்கும் நிறுவனத்தின் மூலம் செலவிடப்படுகின்ற போது, வெளிநாட்டு ஆய்வுகள் / பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / கலந்துரையாடல்கள் / மாநாடுகள் / சுற்றுப்பயணங்கள் தொடர்பில் 2015.05.15 ஆந் திகதிய 01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் கீழ் கொடுப்பனவு மாத்திரம் வழங்கப்படமுடியும்.

(இ) சேவை பிரமாணக் குறிப்புகள், ஆட்சேர்ப்பு திட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின்படி, அந்தந்த அதிகாரிகளால் கட்டாயமாக நிறைவு செய்யப்பட வேண்டிய பயிற்சிகள் அல்லது தகைமைகள் தொடர்பாக, உள்ளூர் ஊழியர்களின் பயிற்சி மீதான செலவு மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய பயிற்சிகளை நடத்துவதற்காக பிரத்தியேகமாக நிறுவப்பட்ட உள்ளூர் நிறுவனங்களுக்கு மட்டுமே அதிகாரிகள் பரிந்துரைக்கப்படுதல் வேண்டும். மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட பயிற்சி வகுதியின் கீழ் வராத அலுவலர்களின் குழுக்களுக்கு நடத்தப்படும் அத்தகைய மாநாடுகள், செயலமர்வுகள் மற்றும் வெளிக்கள பயிற்சிகள் போன்ற பயிற்சிநெறிகளுக்கு அரசாங்க நிதி பயன்படுத்தப்படக்கூடாது.

(ஈ) மேலே குறிப்பிடப்பட்டவாறு ஒதுக்கீடுகளை குறைத்தன் பின்னர், திருத்தப்பட்ட வரையறைகளை மீறாமல், சிக்கனமான முறையில் செலவினத்தைச் செய்வதற்கு முடியுமான வகையில், செலவினத் தேவைகளுக்கு முன்னுரிமையளிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ) அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் போது, இந்த சுற்றறிக்கையின் விதிகள் மற்றும் சிக்கனமான செலவு முகாமைத்துவ முறைகள் செயற்படுத்தப்படுவதனையும், தேவைபயேற்படின், முறையான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதனையும் உறுதிசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**7.** மிகவும் வரையறுக்கப்பட்ட நிதி நெருக்கடியினைக் கருத்திற் கொண்டு, 03/2022, 08/2022 மற்றும் 09/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் மற்றும் சனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்ட 2022.08.15 ஆந் திகதிய PS/SB/Circular/10/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் என்பவற்றை உறுதி செய்யும் ஏற்பாடுகளை கண்டிப்பாக் கடைபிடிக்க பிரதான கணக்கீட்டு மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் தனிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.

**ஒப்பம் /கே.எம். மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்
5. செயலாளர், நிதி ஆணைக்குழு

**பின்னிணைப்பு 1**

## 2023 இல் செலவின சேமிப்பு பற்றிய விபரங்கள்

**செலவினத் தலைப்பு :**

**நிகழ்ச்சித்திட்டம் :**

**கருத்திட்டம் :**

| நோக்கக் குறியீடு | 2023 மதிப்பீடுகள் (ரூபா மில்) | முன்மொழிய ப்பட்ட சேமிப்புக்கள் (ரூபா மில்) | திருத்தப்பட்ட மதிப்பீடுகள் (ரூபா மில்) | எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள்/சேமிப்பதற் காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடவடிக்கைகள் |
|---|---|---|---|---|
| | | | | உதாரணம்:<br>1. உகந்த பொருட் பட்டியல் (Inventory) முகாமைத்துவம்<br>2. நிகழ்நிலை (Online) சேவை வழங்கள்<br>3. வணிக செயன்முறை மறுசீரமைப்பு |
| **மொத்தம்** | | | | |

திகதி : பிரதான கணக்கீட்டு / கணக்கீட்டு அலுவலர்